www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

# kanchipuram district

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2023

## பதினொன்றாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி | கணக்குபதிவியல் | மதிப்பெண்கள் : 90

பகுதி - I

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:-

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 20×1=20

1) பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது
அ) நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்தல்
ஆ) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்து கொள்ளுதல்
இ) நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளுதல்
ஈ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்

2) நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
அ) கடனீந்தோர் ஆ) பணியாளர் இ) வாடிக்கையாளர் ஈ) அரசு

3) இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
அ) இந்திய மைய வங்கி ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
இ) உச்சநீதிமன்றம் ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

4) கணக்கியல் சமன்பாடு, எந்த கணக்கியல் கோட்பாட்டினை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.
அ) இரட்டைத்தன்மை ஆ) நிலைத்தன்மை இ) நிறுவனத்தொடர்ச்சி ஈ) நிகழ்வுத்தன்மை

5) முன்கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு
அ) பெயரளவு கணக்கு ஆ) ஆள்சார் கணக்கு
இ) சொத்துக்கணக்கு ஈ) பிரதி நிதித்துவ ஆள்சார் கணக்கு

6) பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம்
அ) நிதி நிலைமையை அறிய ஆ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய
இ) நிதி நிலைமை மற்றும் இலாப நட்டத்தை அறிய
ஈ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய

7) இருப்பாய்வு கீழ்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்!
அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும்
இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்து கணக்குகளும்

8) விற்பனை ஏட்டின் மொத்தம் ஒரு குறிப்பிட்ட கால அளவில் வரவு வைக்கப்படுவது
அ) விற்பனை கணக்கு ஆ) ரொக்க கணக்கு
இ) கொள்முதல் கணக்கு ஈ) உரிய குறிப்பேடு

9) ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகளை ரொக்க ஏட்டில் பதிந்தால் அது
அ) எதிர்ப்பதிவு ஆ) கூட்டுப்பதிவு இ) ஒற்றைப்பதிவு ஈ) சாதாரணப் பதிவு

10) பின்வருவனவற்றின் எது காலத்தினால் ஏற்படும் வேறுபாடு அல்ல?
அ) செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது
ஆ) விடுதத காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது
இ) வங்கியில் நேரடியாகச் செலுத்திய தொகை
ஈ) ரொக்க ஏட்டில் தவறுதலாக பற்று வைத்தது

11) கீழ்கண்ட பிழைகளில் எது இருப்பாய்வைப் பாதிக்காது
அ) ஒரு கணக்கில் தவறாக இருப்புக்கட்டுதல்
ஆ) பேரேட்டில் எடுத்து எழுதும்போது தவறான கணக்கில் சரியான பக்கத்தில் பதிவு செய்தல்
இ) ஒரு கணக்கில் தவறாகக் கூட்டுதல்
ஈ) ஒரு பேரேட்டுக் கணக்கில் தவறான தொகையை முன்னெடுத்து எழுதுதல்

12) எந்நாள் முதற்கொண்டு தேய்மானம் கணக்கிடப்பட வேண்டும்
அ) சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள் முதல்
ஆ) சொத்தினை வாங்குவதற்கான ஆணை பிறப்பித்த நாள் முதல்
இ) சொத்தினை வியாபார வளாகத்திற்குள் பெற்ற நாள்முதல்
ஈ) சொத்தின் இடாப்பு பெற்ற நாள் முதல்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



13) சொத்தின் இறுதி மதிப்பு என்பது பயனளிப்புக் காலத்தின் ______ அச்சொத்திலிருந்து கிடைக்கும் தொகையாகும்.
அ) ஆரம்பத்தில் ஆ) இறுதியில் இ) மத்தியில் ஈ) இவைகளில் ஏதுமில்லை

14) வங்கி வைப்புகள் மீதான வட்டி
அ) முதலின வரவு ஆ) வருவாயின வரவு இ) முதலினச் செலவு ஈ) வருவாயினச் செலவு

15) வங்கி மேல்வரைப்பற்று எதில் காண்பிக்கப்படும்
அ) வியாபாரக்கணக்கில் ஆ) இலாபநட்டக் கணக்கில்
இ) கடன் பக்கத்தில் ஈ) சொத்து பக்கத்தில்

16) நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது
அ) ஓர் நடப்புச் சொத்து ஆ) ஓர் நீர்மைச் சொத்து
இ) புலனாகும் சொத்து ஈ) புலனாகாச் சொத்து

17) முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் தோன்றுவது
அ) வியாபாரக் கணக்கில் பற்றுப்பக்கம்
ஆ) இலாபநட்டக் கணக்கில் வரவுப்பக்கம்
இ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துக்கள் பக்கம்
ஈ) இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம்

18) கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஒன்றானது
அ) கணினி அமைப்பு செயலிழுத்தல் ஆ) துல்லியத்தன்மை
இ) பலதுறைப்புலமை ஈ) தேக்கம்

19) கணக்கியல் மென்பொருள் என்பது இதற்கு உதாரணம்
அ) அமைப்பு மென்பொருள் ஆ) செயல்பாட்டு மென்பொருள்
இ) பயன்பாட்டு மென்பொருள் ஈ) இயக்க முறைமை

20) ரொக்க ஏட்டின்படி இருப்பு ரூ.2000 வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக் கட்டணம் ரூ.50 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை எனில் வங்கி அறிக்கையின்படி இருப்பு என்ன?
அ) ரூ. 1950 வரவு இருப்பு ஆ) ரூ. 1950 பற்று இருப்பு
இ) ரூ. 2050 பற்று இருப்பு ஈ) ரூ. 2050 வரவு இருப்பு

## பகுதி-II 7×2=14

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண்.30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?

22) பேரேடு என்றால் என்ன?

23) இருப்பாய்வு என்றால் என்ன?

24) ரொக்க ஏட்டின் வகைகள் யாவை?

25) குறிமுறை என்றால் என்ன?

26) பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்துகணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.
அ) முதல் ஆ) கட்டடம்
இ) உள் ஏற்றிச்செல் செலவு ஈ) கொடுபட வேண்டிய கூலி

27) ஒரு நிறுவனம் ரூ. 40000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுதல் செலவாக ரூ.2000 மேற்கொண்டது. இயந்திரத்தின் எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 5 ஆண்டுகள் நேர்க்கோட்டு முறையில் ஆண்டுத்தேய்மானத் தொகையை கணக்கிடுக.

28) பின்வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுக
அ) ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ஆ) கடனுக்கு சரக்கு விற்றது
இ) கடனுக்கு சரக்கு வாங்கியது ஈ) கடனுக்கு சொத்துக்கள் வாங்கியது

29) சஞ்சயின் ஏடுகளில் 31 டிசம்பர் 2017ம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்.

| விபரம் | ரூ. |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு (1.1.2017) | 10000 |
| கொள்முதல் | 26100 |
| விற்பனை | 40600 |
| இறுதிச் சரக்கிருப்பு (31.12.2017) | 13500 |

30) கடனாளிகள் மீது தள்ளுபடி ஒதுக்கு என்றால் என்ன?

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



பகுதி-III 7×3=21

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண்.40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

31) இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

32) 2018 ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்கண்ட இருப்புகள் காணப்பட்டன

சொத்துக்கள்:

ரொக்கம் ரூ. 40000

சரக்கிருப்பு ரூ. 50000

ராஜிடமிருந்து பெற வேண்டியது ரூ. 50000

இயந்திரம் ரூ. 40000

பொறுப்புகள்: ஹரி என்பவருக்கு செலுத்த வேண்டியது ரூ. 30000

தொடக்கப் பதிவினை தருக.

33) கணக்கியலின் முக்கியத்துவத்தினை விரிவாக விளக்குக.

34) பின்வரும் நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதித்து பேரேட்டில் எடுத்தெழுதவும்.

| 2020 | | ரூ. |
|---|---|---|
| ஜனவரி 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 10000 |
| 5 | வங்கியில் செலுத்தியது | 5000 |
| 7 | ராம் என்பவரிடமிருந்து சரக்குகளை ரொக்கத்திற்கு வாங்கியது | 1000 |

35) முப்பத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக?

36) பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமார் என்பவரின் 2020 டிசம்பர் 31 நாளுக்குரிய வங்கிச் சரிக்கட்டும் பட்டியலை தயார் செய்க.

| விபரம் | ரூ. |
|---|---|
| i) வங்கியில் வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது | 500 |
| ii) விடுத்த காசோலை செலுத்துகைக்கு இதுவரை முன்னிலைபபடுத்தப்படாதது | 1000 |
| iii) ரொக்க ஏட்டின்படி இருப்பு | 300 |

37) பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன அவற்றை திருத்துக

அ) ஆனந்துக்கு ரூ.1000த்துக்கு கடனுக்கு சரக்கு விற்றது. விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்படவில்லை

ஆ) இயந்திரம் பழுதுபார்ப்புக்கு ரூ.400 செலுத்தியது தவறாக இயந்திரக் கணக்கில் எடுத்து எழுதப்பட்டுள்ளது

இ) காந்திராஜ்-க்கு ரூ.2000 சம்பளம் செலுத்தியது. பேரேட்டில் தவறாக அவருடைய கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

38) ஜனவரி 1, 2020 அன்று வெளிநாட்டிலிருந்து கொதிகலன் ஒன்று ரூ.10000 வாங்கப்பட்டது. கப்பல் ஏற்றுக்கட்டணம் ரூ.2000, இறக்குமதி வரி ரூ.7000 மற்றும் நிறுவுதல் செலவிற்காக ரூ.1000 செலவிடப்பட்டது. குறைந்து செல் இருப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் எனக் கொண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும். கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31-ல் முடிக்கப் பெறுகின்றன.

39) முதலின வரவு மற்றும் வருவாயின வரவு - வேறுபடுத்துக.

40) கீழ்காணும் விவரங்களிலிருந்து இலாபநட்ட கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | 50000 | வட்டிப் பெற்றது | 2000 |
| அலுவலக வாடகை | 10000 | வெளி தூக்குக்கூலி | 2500 |
| தள்ளுபடி கொடுத்தது | 12000 | பொதுச் செலவுகள் | 3000 |
| விளம்பரம் | 4000 | | |
| தணிக்கைக் கட்டணம் | 1000 | | |

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

பகுதி-IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 7×5=35

41) அ) பின்வரும் நடவடிக்கைகளை இராஜா ஹோட்டலின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.
ஜனவரி

| | | ரூ. |
|---|---|---|
| 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 300000 |
| 2 | ராஜூவிடமிருந்து கடன் கொள்முதல் செய்தது | 100000 |
| 3 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது | 200000 |
| 20 | வங்கியில் கடன் பெற்றது | 100000 |
| 22 | சொந்த உபயோகத்திற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 800 |
| 23 | ராஜூவிற்கு தேசிய மின்னணு பணப்பரிமாற்றம் மூலமாக ரொக்கம் செலுத்தி கணக்கு தீர்க்கப்பட்டது | 99000 |
| 25 | உரிமையாளரின் சங்க உறுப்பினர் சந்தா காசோலை மூலம் செலுத்தியது | 200 |
| 26 | உரிமையாளரின் வீட்டிற்கான மின்கட்டணம் எடுப்பு அட்டைமூலம் செலுத்தியது | 2000 |
| 31 | அறக்கட்டளை அமைப்பிற்கு மதிய உணவு இலவசமாக வழங்கியது | 1000 |
| 31 | வங்கி வசூலித்த பாதுகாப்பு பெட்டக வாடகை | 1000 |

(அல்லது)

ஆ) பின்வருவனவற்றிற்கான கணக்கியல் சமன்பாட்டு விளைவுகள் என்ன?

அ) சுனில் ரூ. 140000 ரொக்கம் மற்றும் ரூ.60000 மதிப்புள்ள சரக்குடன் வியாபாரத்தை தொடங்கினார்.

ஆ) ரூ.20000 மதிப்புள்ள அறைகலன்களை ரொக்கத்திற்கு வாங்கினார்.

இ) அறைகலன் மீது தேய்மானம் ரூ.800

ஈ) வங்கியில் செலுத்தியது ரூ.40000

உ) இணைய வங்கி மூலமாக மின்கட்டணம் ரூ.500 செலுத்தப்பட்டது.

42) அ) கீழ்கண்ட நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டு பதிவுகள் தந்து அவற்றைக் கொண்டு ரொக்க கணக்கு மற்றும் விற்பனை கணக்கு ஆகியவற்றை தயாரிக்கவும்.
2020

ஆகஸ்டு 10 சரக்குகள் விற்பனை செய்யப்பட்டு காசோலையும் பெறப்பட்டது ஆனால் அதனை வங்கியில் செலுத்தவில்லை ரூ. 30000

14 கோபி என்பவருக்கு கடனாக விற்ற சரக்கு ரூ. 12000

20 கோபியிடமிருந்து ரொக்கம் பெற்றது ரூ. 12000

(அல்லது)

ஆ) பியர்ல் என்ற வியாபாரியின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகளிலிருந்து 31.03.2020 அன்றைய இருப்பாய்வினை தயாரிக்கவும்.

| விபரம் | ரூ. | விபரம் | ரூ. |
|---|---|---|---|
| முதல் | 44000 | முதலீடு மீதான வட்டி | 2000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 5000 | சுங்க வரி | 3000 |
| கூலி | 800 | கணிப்பொறி | 20000 |
| எடுப்புகள் | 4000 | விற்பனை | 72000 |
| கொள்முதல் | 75000 | தொடக்கச் சரக்கிருப்பு | 10200 |

43) அ) பின்வரும் நடவடிக்கைகளை பொன்னியின் விற்பனை ஏடு மற்றும் விற்பனை திருப்ப ஏட்டில் பதிவு செய்க.
2020

ஆகஸ்டு 1 இடாப்பு எண். 68ன் படி செந்திலுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ரூ. 20500

4 இடாப்பு எண். 74ன் படி மாதவனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ரூ. 12800

7 இடாப்பு எண். 78ன் படி கனகசபைக்கு கடனுக்கு சரக்கு விற்றது ரூ. 7500

15 வரவுக்குறிப்பு 7ன்படி செந்தில் திருப்பிய சரக்கு சரக்கு மதிப்பு ரூ.1500க்கு ரொக்கம் அளிக்கப்படவில்லை

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



20 செல்வத்திடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ரூ. 13300
25 வரவுக்குறிப்பு 11ன்படி மாதவன் திருப்பிய சரக்கு ரூ.1800க்கு ரொக்கம் செலுத்தப்படவில்லை.

(அல்லது)

ஆ) i) தேய்மானம் - வரையறுக்கவும்
ii) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் மூன்றினை விவரி?

44) அ) பின்வரும் செலவினங்களை முதலின, வருவாயின அல்லது நீள்பயன் வருவாயின செலவினங்களை கூறவும்.
i) நிலம் வாங்குவதற்காக வழக்கறிஞருக்கு கொடுத்த சட்டசெலவுகள் ரூ. 20000
ii) புதிய பொருளைச் சந்தையில் அறிமுகப்படுத்த மேற்கெண்ட பேரனவிலான விளம்பர செலவுகள் ரூ. 1200000
iii) தொழில்சாலை உரிமம் புதுப்பித்தது ரூ. 12000
iv) தொழிற்சாலையில் வண்ணம் பூசுவதற்கான செலவு ரூ. 4000
v) இரயில்வேத்துறைக்கு இரயில் தண்டவாளம் அமைக்க செலுத்திய தொகை ரூ. 50000

(அல்லது)

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதியவும்.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 2020 | | | |
| ஜனவரி | 1 | கைரொக்கம் | 11500 |
| | 5 | ரொக்க வைப்பு இயந்திரம் மூலம் இராமநாதனுக்கு செலுத்தியது | 300 |
| | | அவர் அளித்த தள்ளுபடி | 10 |
| | 8 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 400 |
| | 10 | இராஜகோபாலிடமிருந்து ரொக்கம் பெற்றது | 980 |
| | | அவருக்கு அளித்த தள்ளுபடி | 20 |
| | 15 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 400 |
| | 21 | சாந்தி என்பவருக்கு ரொக்கம் செலுத்தியது | 295 |
| | | அவரிடம் பெற்ற தள்ளுபடி | 5 |
| | 25 | கூலி ரொக்கமாக செலுத்தியது | 50 |
| | 31 | சஞ்சிவ் என்பவருக்கு ரூ.300 அளித்து கணக்குத் தீர்த்துக்கொண்டது | 400 |

45) அ) கீழ்காணும் தகவல்களிலிருந்து திருமதி. வினோதினி என்பவரின் ஏடுகளில் 2020 டிசம்பர் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்ட கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

| விபரம் | ரூ. | விபரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2500 | விற்பனை | 7000 |
| உள்தூக்குகூலி | 2700 | கொள்முதல் | 3300 |
| இறுதி சரக்கிருப்பு | 4000 | வாடகை | 2600 |
| வட்டிப் பெற்றது | 2500 | முதல் | 52000 |
| பொறிகள் | 52000 | ரொக்கம் | 6400 |
| கடனீந்தோர் | 8000 | | |

(அல்லது)

ஆ) பல்வேறு வகையான குறிமுறையாக்க முறைகளைக் குறிப்பிடுக.

46) அ) நிக்கோலஸ் என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட 2020 மார்ச் 31ம் நாளைய இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | ரூ. | விபரம் | ரூ. |
|---|---|---|---|
| கொள்முதல் | 10000 | விற்பனை | 15100 |
| கூலி | 600 | பெற்ற கழிவு | 1900 |
| உள் ஏற்றிச்செல் செலவு | 750 | வாடகைப் பெற்றது | 600 |
| விளம்பரம் | 500 | | |
| வெளித்தூக்குகூலி | 400 | | |
| சரக்கிருப்பு 01.01.2020 | 1000 | | |

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



2020 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கை தயார் செய்யவும்.

சரிக்கட்டுதல்கள்:

அ) முன்கூட்டிப் பெற்ற கழிவு ரூ. 400

ஆ) கொடுபட வேண்டிய கூலி ரூ.200

இ) முன்கூட்டி செலுத்திய விளம்பரம் ரூ. 150

ஈ) 31.03.2020 அன்று இறுதி சரக்கிருப்பின் மதிப்பு ரூ.2100 **(அல்லது)**

ஆ) நவீன வணிக உலகின் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக? (ஏதேனும் ஐந்து)

47) அ) கீழ்கண்ட பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும்போது கண்டறியப்பட்டன அவற்றை திருத்தம் செய்யவும்.

அ) உரிமையாளரின் தனிப்பட்ட லெவு ரூ.200 பயண செலவு கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

ஆ) கடனுக்கு ரூ.400க்கு ரமேஷிடமிருந்து சரக்கு வாங்கியது தவறாக கணேஷ் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

இ) மதிக்கு ரூ.500 சம்பளம் செலுத்தியது. பேரேட்டில் மதியின் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

ஈ) கட்டிட விரிவாக்கத்திற்காக ரூ.2700 செலுத்தியது. பழுதுபார்ப்புக்கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

உ) மேகலாவுக்கு ரூ.700க்கு கடனுக்கு சரக்கு விற்றது. பேரேட்டில் கிருஷ்ணன் கணக்கில் எடுத்து எழுதப்பட்டுள்ளது. **(அல்லது)**

ஆ) ஜெயசீலி என்னும் வணிகர் பலசரக்கு கடையினை நடத்தி வருகின்றார். 2020 ஜனவரியில் அக்கடையின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தது. அவைகளை குறிப்பேட்டில் பதிவு செய்க.

| | | | ரூ. |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 80000 |
| | 2 | வங்கியில் செலுத்திய ரொக்கம் | 40000 |
| | 3 | ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | 5000 |
| | 4 | லிப்டன் நிறுவனத்திடம் சரக்குகளை கடனுக்கு கொள்முதல் செய்தது | 10000 |
| | 5 | ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 11000 |
| | 6 | சம்பளத்தை ரொக்கமாக வழங்கியது | 5000 |
| | 7 | லிப்டன் நிறுவனத்திடம் ஜனவரி 4 அன்று கொள்முதல் செய்ததற்கான தொகை காசோலை மூலம் செலுத்தியது | - |
| | 8 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 4000 |
| | 9 | மின்கட்டணம் ரொக்கமாக செலுத்தப்பட்டது | 1000 |
| | 10 | நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம் | 300 |

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com